விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 164 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 18 புதன்கிழமை (01.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சகோதரர்கள் வெட்டிப் படுகொலை
புத்தளத்தில் பயங்கரம் 05

இருதய சத்திரசிகிச்சை நிறுத்தப்படும் அபாயம் 03

துமிந்த சில்வாவை கைது செய்க

## ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை இடைநிறுத்தியது உயர் நீதிமன்றம்



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வீடமைப்பு அதிகார சபையின் தலைவருமான துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட, ஜனாதிபதி பொதுமன்னிப்பு செயற்பாட்டை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது.

அத்துடன் துமிந்த சில்வாவை கைது செய்வதோடு அவரின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்யவும் மற்று மோர் உத்தரவை 15

## 50 ஆயிரம் சமையல் எரிவாயு இன்று சந்தைக்கு

(கொழும்பு)

50 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்கள் இன்று நாடளாவிய 15

# பெறுமதிசேர் வரி
# 12% ஆக அதிகரிப்பு

## பொருட்கள், சேவைகளின் விலை மேலும் பன்மடங்கு உயர்வடையும்

(கொழும்பு)

உடன் அமுலாகும் வகையில் பெறுமதிசேர் வரி (வற்) 12% ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொருட்கள் சேவைகளின் விலைகள் மேலும் பன்மடங்கு அதிகரிக்கப்படவுள்ளன.

மூன்று கட்டங்களாக வரிகளை அதிகரிப்பதற்கான திட்டத்தை பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, சில வரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்படவுள்ளதுடன், மேலும் சில வரிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்தும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்தும் அதிகரிக்கப்படவுள்ளன.

உடன் அமுலாகும் வகையில் பெறுமதிசேர் வரி (VAT) 8 வீதத்தில் 15

உணவு வாங்கப் பணம் இல்லை

## மிருகக்காட்சிசாலைகளில் பட்டினியில் மிருகங்கள்

அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் அதிகாரிகள் தெரிவிப்பு



(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சி சாலை மற்றும் ஏனைய மிருகக் காட்சிசாலைகளில் உள்ள விலங்குகளுக்கு தினசரி உணவு வழங்குவதற்கு பணம் இல்லை என விலங்கியல் திணைக் 15

நாட்டின் தற்போதைய நிலை...



கடுமையான மழைக்கு மத்தியில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள்...

மன்னாரில் வாகனத்தில் பயணித்த

## இரு இளம் குடும்பஸ்தர்கள் திடீரென உயிரிழப்பு

அதிகளவு போதை என சந்தேகம்?

(மன்னார்)

மன்னாரில் திடீரென உயிரிழந்ததாக கருதப்படும் இரு இளம் குடும்பஸ்தர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் 15

## தனியார் வகுப்புக்குச் சென்ற மாணவி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



வவுனியாவில் பதற்றம்; பொலிஸ், இராணுவம் குவிப்பு

(வவுனியா)

வவுனியா கணேசபுரத்தில் தனியார் வகுப்புக்குச் சென்ற மாணவி ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனால் அப்பகுதி 15

இலங்கைக்கு பயணிக்கும் விமானங்கள்

## எரிபொருளை முழுமையாக வைத்திருக்குமாறு வேண்டுகோள்

எரிபொருள் நெருக்கடியையடுத்து நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை வரும்போது தங்கள் விமானங்களின் எரிபொருள் தாங்கிகளை முழுக் கொள்ளளவில் வைத்திருக்குமாறு அல்லது வேறு இடத்தில் எரிபொருளை நிரப்பும் திட்டத்துடன் இலங்கை வருமாறு சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் ரெஹான் வன்னியப்பா சர்வதேச விமான நிறுவனங்களிடம் கோரி 16

21 ஆவது திருத்தம்

## கட்டாயம் நிறைவேற வேண்டும்

தயாசிறி

(கொழும்பு)

அரசமைப்பின் 21 15

## யாழ்.போதனாவில் மருந்துக்கு தொடர்ந்து தட்டுப்பாடு

முறையிட்டும் பலனில்லை என வைத்தியர் யமுனானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகின்றது.

இது தொடர்பில் உரிய தரப்பினரிடம் முறையிட்டு பலனில்லை என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா வாழ்த்து

Congratulations!



## திரு. கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரன்

[ உப அதிபர் – யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை ]

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா / குடமியன் அ.த.க. பாடசாலை | 17.08.1988 - 21.04.1998 |
| யா / கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. | 22.04.1998 - 27.07.2010 |
| யா / உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை | 28.07.2010 - 01.06.2022 |

ஆசிரியப் பணியதனை செவ்வனே ஆற்ற
இடைநிலைக் கல்வி தனை
இங்கிதமாய்க் கற்பித்து
ஈடில்லாப் புலமை கொண்டு
உண்மையாய், ஊக்கமாய்

எழு சுடராய் ஒளிர்ந்து
ஒப்புவமை இல்லா சேவையாற்றி – பதில் அதிபராய்
ஓய்வு பெறும் உம் புகழ்
அவனியெல்லாம் பரவ
அகவை அறுபதில் வாழ்த்தி வணங்குகிறோம்.
வாழ் வளமுடன்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

(11661, 11678)


## யாழ். போதனா...

வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள மருந்து பற்றாக்குறை தொடர்பில் சில வாரங்களுக்கு முன்னர் வெளிக்கொண்டுவரப்பட்டு இது தொடர்பில் உரிய தரப்புக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பல மருத்துவ உதவிகள் சுகாதார துறைக்கு கிடைக்கப்பெற்ற போதிலும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு இதுவரை அவை சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என வைத்தியர் யமுனானந்தா குற்றம் சாட்டினார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர்கள் நலன் கருதியும் மருந்து பொருட்கள் உடன் கிடைக்கபெற உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (ம-7)


## தென்னிந்திய யாத்திரை

நாட்கள் - 16 ஆரம்பம் - 01.07.2022

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா 5 மாநிலங்களுக்கூடான யாத்திரை. 10 பேர்.

உடன் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க

விபரங்களுக்கு:- கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்

T.P:- 077 768 0102

(C-4401)



## தவறிவிட்டது

30.05.2022 கச்சேரி யாழ்ப்பாணம் மினி பஸ்ஸில் கைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. வாசுகி யோகசர்மா (**686580849**V) தொல்புரம் மேற்கு, சுழிபுரம் மற்றும் மாணிக்கர் மகாதேவன் - விக்காவில் காரைநகர் ஆகிய இருவருடைய தேசிய அடையாள அட்டை, ஜேர்மன் அடையாள அட்டை என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்துதருபவர்களுக்குதகுந்தசன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (11689)

கேதீஸ்வரன் - 076 865 9394
வாசுகி - 077 449 6932



## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அண்மையாக கல்வித் தேவைக்காக மண்டபமாகவும் அறைகளாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
(கல்வித் தேவைக்கு மட்டும்)

தொடர்புகளுக்கு (C-4399)

021 222 8148, 077 846 9721
075 851 7350, 077 662 1856



## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய்

யாழ். 125, பிரதான வீதி,
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கிளைக்கான
**பதவி வெற்றிடங்கள்**

**இணைப்பாளர்/ வரவேற்பாளர் / காசாளர்**
**(Co- ordinator/ Cashier/ Receptionist)**

க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியுடன் 02 - 03 முன் வருட அனுபவம் எதிர்பார்க்கப்படும்.

- முகாமைத்துவம் சார்ந்த விடயங்கள்.
- மொழிகளில் சிறந்த ஆற்றல்.
- கணனியில் கடமையாற்றக்கூடிய திறன்.
- பொதுமக்கள் உறவை மேம்படுத்தும் திறன்.
- கணக்கியல் தொடர்பாக கற்றிருத்தல் எதிர்பார்க்கத்தக்கது.

**மருந்தாளர் (Pharmacist)**

- பட்டதாரி (B.Sc in Pharmacist)
- மருந்தாளர் பதிவுச் சான்றிதழ் (Registration Certificate)

**மருந்தக உதவியாளர் (Pharmacist Assistant)**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி.
- ஏற்கனவே கடமையாற்றிய முன்னனுபவம் விரும்பத்தக்கது.

**Messenger (Running Boy)**

- க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி.
- உந்துருளி ஓடக்கூடிய வாகன அனுமதிப் பத்திரம் வைத்திருப்பதுடன் வாகன உரிமையாளராகவும் இருத்தல் வேண்டும்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security)**

- க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி.
- முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.

அனைத்து பதவிகளுக்குமான விண்ணப்பதாரி 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 10.06.2022**

விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலமாகவோ நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (E-mail) அனுப்பி வைக்கவும்.
நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.

தலைவர், கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)
மூளாய், சுழிபுரம்.

E- mail : moolaii@yahoo.com ☎-021 225 0441

(C-4402)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 29 09 1935

இறப்பு 02 05 2022

கடந்த 02.05.2022 திங்கட்கிழமை இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கந்தர் கிருஷ்ணபிள்ளை

[ தபாலக ஊழியர் – குடத்தனை ]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.06.2022) புதன்கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று நாளை மறுதினம் (03.06.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் துயரில் பங்குபற்றியவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"சிவபவனம்"
விக்னேஸ்வரா வீதி,
காரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(C- 4390)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயம்

(கொழும்பு)

**இன்று முதல் கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இருதயநோய் நிபுணர் மருத்துவர் கோத்தபாய ரணசிங்க இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருதய சத்திர சிகிச்சைகளுக்கான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

சராசரியாக, மருத்துவமனைகளுக்கு நாளாந்தம் நான்கு பைபாஸ் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்ற போதிலும் இவை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து இருதய நோயாளிகளுக்கும் தேவையான எனோக்ஸாபரின் தடுப்பூசிக்கு மருத்துவமனையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, இருதய நோயாளிகள் அதிக ஆபத்தில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொழும்பு தேசிய மருத்துவமனையில் தற்போது இருதய அறுவை சிகிச்சைக்கான பல அவசர மருந்துகள் இல்லை.

இந்த மருந்துகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் கிடைக்காவிட்டால் ஏனைய இருதய அறுவை சிகிச்சைகளும் தடைபடும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6)

# அண்ணனை நினைத்து கலங்கிய தம்பி கோட்டா

(கொழும்பு)

பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவை நீக்குவதே தனது அரசியல் வாழ்க்கையில் எடுத்த மிகவும் கடினமான தீர்மானம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியினருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக தான் அந்த கடினமான தீர்மானத்தை எடுத்ததாகவும், நாட்டின் எதிர்காலத்திற்குத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தனது விருப்பத்தின் பேரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்து அவரை பிரதமராக நியமித்தேன். அந்த நம்பிக்கைக்கமைய, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் தமக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# கோட்டாவின் கீழ் கொண்டுவரப்பட்ட 42 திணைக்களங்கள்

## வெளியான அதிவிசேட வர்த்தமானி

(கொழும்பு)

இலங்கை டெலிகொம், முதலீட்டுச் சபை மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு உள்ளிட்ட 42 திணைக்களம், சட்டபூர்வ சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொறுப்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அமைச்சர்களின் விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 அமைச்சுக்களின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் அடங்கிய வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் உள்ள நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் 57 நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் குறித்த வர்த்தமானி தெரிவிக்கின்றது. (நி-6)

# சஷி வீரவன்ச பிணையில் விடுதலை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்குக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்குப் பொய்யான தகவல்களை முன்வைத்து முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை, அதனை உடன் வைத்திருந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவை குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் அவருக்கு இரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ள நிலையில், அதற்கு எதிராக அவர் முன்வைத்துள்ள மேன்முறையீட்டு கோரிக்கை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மேன்முறையீட்டுக் கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான், சஷி வீரவன்சவை இவ்வாறு பிணையில் விடுவிப்பதற்கு உத்தரவிட்டார். (நி-6)

# மரண அறிவித்தல்

## அமரர்.திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம்



**தோற்றம்**
**08 . 09 . 1954**

**மறைவு**
**29 . 05 . 2022**

பருத்தித்துறையினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. **புவனேஸ்வரி சுப்பிரமணியம்** 29. 05 .2022 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தங்கமணி தம்பதியின்ரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினசாமி இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசாமி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் முகுந்தன் (லண்டன்), விஜிதா (லண்டன்),ரமணன்(லண்டன்), சகுந்தலா (நியூசிலாந்து ), ஜெகன்(பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமநிதி ( லண்டன்), சிவானந்தராஜா (லண்டன்), பரணிதரன் (நியூசிலாந்து), சுகர்ணா(லண்டன்), தர்ஷினி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரிஷ்ணி (லண்டன்), ஹர்சினி (லண்டன்), சிவத்திரா (லண்டன்), சிவனிஷா (லண்டன்), சிவாஷன் (லண்டன்), துஷா (நியூசிலாந்து), மதுஷா(நியூசிலாந்து), ஆதி(லண்டன்), சுவாதி(லண்டன்), தமிழினி (பருத்தித்துறை), அஸ்வினி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.06.2022 V.M வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(11685)

| | | |
|---|---|---|
| முகுந்தன் | 07838384007 | தகவல்: |
| விஜிதா | 07454170488 | குடும்பத்தினர். |
| சகுந்தலா | 00642108529974 | |
| ரமணன் | 07962397574 | V.M வீதி, |
| ஜெகன் | 077 669 1803(இலங்கை) | பருத்தித்துறை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கான முகாமையாளரை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்

## விதிமுறைகள்

1. இந்து சமய ஆசார சீலராக இருத்தல் வேண்டும்.
2. காரைநகர் பிரதேசத்தில் (தற்போது) வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. 18 வயதுக்கு மேற்பட்ட ஆணாக இருத்தல் வேண்டும்.
4. ஆலய முகாமைத்துவத்தை நிர்மாணிக்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
6. மாதாந்த வருமானம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


தாங்களின் பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரத்தினை 2022.06.10 ஆம் திகதிக்கு முன்னராக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி : பெறுநர் குழு,
பிரதேச செயலகம்,
காரைநகர்.

பெறுநர் குழு சார்பில்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், காரைநகர்.

(C-4406)

# கின்னஸ் சாதனையுடன் நடைபெற்ற ஐ.பி.எல் 2022 இறுதிப்போட்டி



ஐ.பி.எல்லின் 15வது சீசனில் ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதிய இறுதிப் போட்டியில், ஐ.பி.எல் நிர்வாகக் குழு உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் ஜெர்சி உருவாக்கி அதனை கின்னஸ் உலக சாதனையில் இடம்பெறச் செய்துள்ளனர்.

ஐ.பி.எல்லில் இடம் பெற்று இருந்த 10 அணிகளின் சின்னாங்கள் பொறிக்கபட்ட மற்றும் கிட்டத்தட்ட 66X44 என்ற மீற்றர் அளவு கொண்ட இந்த கிரிக்கெட் ஜெர்சியை கிரிக்கெட் வர்ணனையாளர் ரவி சாஸ்திரி அறிமுகம் செய்து வைக்கவே. அதற்கான கின்னஸ் உலக சாதனை சான்றிதழை பி.சி.சி.ஐ தலைவர் சவுரவ் கங்குலி, செயலாளர் ஜெய்ஷா மற்றும் ஐ.பி.எல் தலைவர் பிரஜேஷ் படேல் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.(4)

# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம் - 2022

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைக்கு கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்குஅமைவாக கேள்வி கோரப்படுகின்றது. இவ் வேலைத் திட்டம் தொடர்பில் 04/2016 (ii) ஆம் இலக்க 08.05.2019ஆம் திகதிய மற்றும் 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரமுன்னுரிமை பின்பற்றப்படும். அத்துடன் 03/2020 ஆம் இலக்க 09.10.2020ஆம் திகதிய, 03/2020 (I) ஆம் இலக்க 11.01.2021ஆம் திகதிய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளும் பின்பற்றப்படும்.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. கோரப்பட்ட வேலைக்கு தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212255381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் என்ற இடத்திலிருந்து 01.06.2022ம் திகதி தொடக்கம் 15.06.2022ஆம் திகதிவரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா2000.00 (வரி நீக்கலாக) செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 16.06.2022ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாக போடப்படுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கோரப்பட்ட வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்து ஏழு நாட்களாகும். (31.08.2022ஆம் திகதிவரையாகும்).
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல. | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | திண்மக்கழிவு முகாமைத்துவ நிலைய விரிவாக்கல் வேலை, கல்லூண்டாய். NP/14/41(16)/W/CF/2022/02 | 5.43 | 60 நாட்கள் | C7 &C6 (கட்டடம்) | 54,400.00 | 28.09.2022 |
| 02 | சிறுவர் பூங்கா அமைத்தல் - மிகுதிவேலை, சுழிபுரம் NP/14/41(16)/W/CF/2022/03 | 2.34 | 45 நாட்கள் | C8 &C7 (கட்டடம்) | 23,500.00 | 28.09.2022 |
| 03 | காக்கைதீவு சந்தையில் மீன்வெட்டும் கல் அமைத்தல் மற்றும் விரிவாக்கல் வேலை NP/14/41(16)/W/CF/2022/04 | 2.51 | 60 நாட்கள் | C8 &C7 (கட்டடம்) | 25,200.00 | 28.09.2022 |

11. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 09.06.2022ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

**அ.ஜெபநேசன்**
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
01.06.2022

(C-4404)

# கண்ணீர் அஞ்சலி

எமது சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பத்திராதிபர் **Dr.K.சிவாதரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

## வை.கந்தசாமி



அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 25.06.1944 இறப்பு 14.05.2022

பிரிவால் துயருறும்
அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை.

(11676)

# University of Jaffna, SriLanka
## Faculty of Arts
## Walk- in- interview

Walk in Interview for the selection to the Post of **Temporary Assistant Lecturer/Temporary Instructor** will be held on **16th June 2022** in the **Mini Board Room of the Faculty of Arts, University of Jaffna,** in the following manner:

**Temporary Assistant Lecturer in Art & Design (Painting, Sculpture)/ Temporary Instructor in Art & Design(Painting, Sculpture) - 9.30 am**
**Temporary Assistant Lecturer in Music (Veena, Vocal, Miruthangam) - 10.45 am**

### Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/ Temporary Instructor

1.A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honors.
**Or**
2.A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honors.
**Or**
3.(a) A degree with specialization in the relevant subject without Honors or any other degree with at least Second Class Honors **and**
(b) A recognized postgraduate degree in the relevant subject.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (fixed) |
| Temporary Instructor | Rs. 40,920/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview with educational and other relevant certificates (originals) along with certified copies, national identity cards and Curriculum Vitae.

* Candidates who are awaiting results of the final degree examination may also appear.

Registrar
31.05.2022

(C-4403)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்கள் படுகொலை புத்தளத்தில் கொடூரம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டம், நவகத்தேகம - முல்லேகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லேகம பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சகோதரனும், 25 வயதுடைய சகோதரியுமே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

குடும்பத்தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறில் மனைவியின் மூத்த சகோதரரை வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

அதேநேரத்தில் மனைவியையும் கணவன் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரான 27 வயதுடைய சந்தேகநபர் காயங்களுக்குள்ளான நிலையில், புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)


1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 1955 . 05 . 24

இறப்பு 2021 . 06 . 12



(C-4391)

அமரர். மாணிக்கம் சிவானந்தசிவம்

(01.06.2022 புதன்கிழமை)

அன்பு முகம் மறைந்து ஓராண்டு ஆனதே
ஆனாலும் அழியாது எம் நெஞ்சில் உம் நினைவுகள் மாறுமோ
எம் சோகம் ஆறுமோ இப் புவியில்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் ஆறாது அழியாது
என்றும் எம் அன்புக்குரியவரே!

குடத்தனை மேற்கு (வதிரி)

தகவல் : (மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

2 ம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 28 . 02 . 1958

இறப்பு 05 . 09 . 2020



அமரர். மாணிக்கம்- சகுந்தலாதேவி

ஈராண்டு முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
நீரான வடுக்கள் இங்கே ஒரு போதும் ஆறாது
நிலம் வியக்க இங்கு நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

(C-4392)

குடத்தனை மேற்கு (வதிரி)

தகவல் சகோதரர்கள் ,மைத்துனிமார்கள்.


# இராசிபலன்

01.06.2022
வைகாசி 18, புதன்கிழமை
துதியை முன்னிரவு 8.53 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.31 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சர்வதேச குழந்தைகள் தினம்
சந்திராஷ்டமம் - விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**ரிஷபம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் அக்கறை பெருகும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமுயற்சி வேட்டைப் பொருளைக் கொன்றே தீரும்.

# பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா



(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நவநாள் வழிபாடுகள் எதிர் வரும் 4 ஆம் திகதி சனிக் கிழமை ஆரம்பமாகி ஒவ்வொரு நாட்களும் மாலை 5.30 மணிக்கு இடம் பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் 13 ஆம் திகதி புனிதரின் திருவிழா முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கும் திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு புனிதரின் தேர்ப்பவனி இடம்பெறும் என ஆலய பங்குத் தந்தை அருட் பணி எம்.ஜெறோ செல்வநாயகம் அறிவித்துள்ளார். (நி-6)

# அக்னி இளைஞர் அணியினரால் யாசகர்களுக்கு சமைத்த உணவு வழங்கி வைப்பு



(குப்பிழான்)

யாழ்.திருநெல்வேலியைத் தளமாகக் கொண்டு.இயங்கும் அக்னி இளைஞர் அணியின் இரண்டாம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு "பசித்தோர்க்கு உணவளிப்போம்" எனும் தொனிப்பொருளில் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இன்றையகால இடர்நிலையில் சிக்குண்டு தவிக்கும் 150 இற்கும் மேற்பட்ட வீதியோர யாசகர்கள், ஏழைகளுக்கு மேற்படி இளைஞர் அணியைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து மதிய உணவு சமைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கினர்.

அக்னி இளைஞர் அணியின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்த போதும் நாட்டில் தற்போது நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு விழா நிகழ்வை ரத்துச் செய்து "பசித்தோர்க்கு உணவளிப்போம்" எனும் தொனிப் பொருளிலான குறித்த சமூகப் பணியை முன்னெடுத்தனர். (4-6-18)

# பேருந்துகளில் இன்றுமுதல் சோதனை நடவடிக்கை


(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச் சட்டத்திற்கு அமைவாக, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையானது திடீர் பரிசோதனை அதிகாரிகளை நியமித்துள்ளது.

இவர்களால் வடமாகாணம் முழுவதும் பேருந்துகளில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த நியதிச் சட்டத்தின் கீழ் திடீர் பரிசோதனை அதிகாரிகளுக்கு பயணி ஏற்றிச் செல்லுகை அனுமதிப்பத்திரம், பேருந்தின் தகுதிச் சான்றிதழ், சாரதியின் மருத்துச் சான்றிதழ், நேரசூசிக்கு அமைவாக பயணத்தை மேற்கொள்ளல், பயணிகளிடமிருந்தான கட்டண அறவீடு போன்ற விடயங்கள் ஆரம்ப கட்டமாக பரிசோதிக்கப்பட உள்ளன.

இவர்களின் பரிசோதனை நடவடிக்கையானது இன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது என வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சு.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (4-6)



கொக்குவில் கிழக்கு, கருவேலடி ஒழுங்கையில் வசிக்கும் இளைப்பாறிய அரச கணக்காளரான வே.கைலேஸ்வரன் கடந்த 26 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## 30 வருடங்களின் பின்

# ஊறணி அந்தோனியார் ஆலயம் புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் போது இடித்தழிக்கப்பட்ட ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் மீண்டும் 30 வருடங்களின் பின்பு புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் கலந்துகொண்டு ஆலயத்தினை ஆசீர்வதித்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

கடந்த 30 வருட யுத்தம் காரணமாக ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. பின்னர் 2018 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு மீண்டும் புதிதாக ஆலய பங்கு மக்களின் உதவியுடன் கட்டப்பட்டது.

நிறைவு பெற்ற ஆலயம் திருவிழா தினமாகிய நேற்று முன்தினம் திருப்பலியுடன் மக்கள் வழிபாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது. 30 வருடங்களின் முன்னர் ஆலயத்தின் பங்கு தந்தையாக விளங்கிய தேவராயன் அடிகளார் மீண்டும் ஆலயத்தினை பொறுப்பெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# மாற்றுவலுவுடையோர் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம்

(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடமாகாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த செய்திக் குறிப்பில்,

மாற்றுவலுவுடையோர் பொது இடங்களுக்கு பிரவேசிப்பதற்குரிய அணுகும் வசதிகள் ஏற்படுத்துவதற்கு சட்டங்களும், ஒழுங்கு விதிகளும், உயர்நீதிமன்ற தீர்ப்பும் வலுவில் உள்ள நிலையில் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் மாற்றுவலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்காமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பின் பிரகாரம் 3 ஆம் அத்தியாயத்தின் உறுப்புரை 12 இன் உப பிரிவு 2 இன் பிரகாரமும் 1996 ஆம் ஆண்டு மாற்றுவலுவுடையோருக்கான அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்காமை தொடர்பில் 1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மற்றும் வவுனியா அலுவலகங்களில் அவதானிப்புகளின் கீழ் இரண்டு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றதன் அடிப்படையில் இலங்கை வங்கியின் உரும்பிராய் கிளையிலும் முல்லைத்தீவு கிளையிலும் மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல நிறுவனங்களில் மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகள் காணப்படவில்லை என்பதுடன் அந்நிறுவனத் தலைவர்கள் தாமாக முன்வந்து மாற்றுவலுவுடையோர் உட்பிரவேசிப்பதற்கான வசதிகளை மேற்கொள்ளவேண்டும் என குறிப்பிடப்படுள்ளது. (4-6-33)

# கணபதி அறக்கட்டளை ஊடாக வாழ்வாதார உதவிகள்

(கரணவாய்)

கணபதி அறக்கட்டளை ஊடாக வடமராட்சியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக வீட்டுத்தோட்டம் செய்வதற்கு கத்தரி கன்று, தக்காளி கன்று, மிளகாய் கன்று என்பன வழங்கப்படவுள்ளது.

தேவையானவர்கள் கணபதி அறக்கட்டளையில் பதிவுகளை மேற்கொள்ளவும். (4-6-60)



பதுளை பண்டாரவன்னை கிரேக் தோட்டம் கீழ்ப் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயக் கட்டடப் புனரமைப்புக்காக தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐம்பதாயிரம் ரூபாய் நிதி உதவி மேற்படி ஆலய நிர்வாக சபையினரிடம் வழங்கப்பட்டது.

(படம்:-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பை ஆதரிக்க மாட்டேன்- சரத் வீரசேகர



(கொழும்பு)

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தைத் தான் எதிர்க்கப் போவதாக ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் மாலை நடத்திய கலந்தாலோசனையின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

கடந்த காலங்களில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் நான் ஆதரவளிக்கவில்லை.

தற்போதைய 21 ஆவது திருத்தச் சட்டத்தையும் ஆதரிக்கப் போவதில்லை.

நாடு முழுவதும் உள்ள மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரின் அதிகாரங்களைக் குறைக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் நான் ஆதரிக்க மாட்டேன் எனத் தெரிவித்தார். (நி-6)

# 21 மூலம் பசிலை வெளியேற்றியே தீருவோம்

(கொழும்பு)

"பசில் நிதி அமைச்சராக இருந்தபோதுகூட நாம் அஞ்சவில்லை. தற்போது அவர் சாதாரண பசில். பாராளுமன்றத்தில் அவருக்குப் பெரும்பான்மை பலம் இருந்தாலும் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தின் ஊடாக அவரை வெளியேற்றுவோம்" என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

21 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றி, நாட்டையும் பாராளுமன்றத்தையும் பசிலிடமிருந்து பாதுகாப்போம்.

பாராளுமன்ற அதிகாரம் பசிலிடம் இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், 21 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, இரட்டைக் குடியுரிமை கொண்ட பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்கிற நம்பிக்கை எமக்கில்லை. ஆனாலும், நாடு குழியில் விழுந்துள்ளது. எனவே, இப்போது கட்சி அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டு நாட்டைக் குழியிலிருந்து மீட்க வேண்டும்.

'கோட்டா கோ கம', 'ரணில் கோ கம' என்பற்றை ஒருபுறம் வைத்துவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னர் விரைவாகத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். தேர்தல் ஒன்று நடந்தால் யார் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# 12 நாட்களாக

# விமான நிலையத்தில் மருந்துகள் தேக்கம் உடனடியாக விடுவிக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளை உடனடியாக விடுவிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது குறித்த பணிப்புரை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களினால் குறித்த மருந்துகள் மற்றும் உபகரணங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



இவை நாட்டை வந்தடைந்து 12 நாட்கள் கடந்துள்ள போதும், அவற்றை கட்டுநாயக்கவில் இருந்து விடுவிப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையிலே, குறித்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உடனடியாக விடுவிக்குமாறு சுகாதார அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (நி-6)

# 'கோல்டன் பெரடைஸ்' விசா திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கான நீண்டகால வதிவிட விசா திட்டமான கோல்டன் பெரடைஸ் விசா திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்னவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (நி-6)

# சீரற்ற காலநிலையால் கோட்டா கோ கம கூடாரங்கள் சேதம்




(கொழும்பு)

காலிமுகத்திடல் பகுதியில் கோட்டா கோ கம உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 54 ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பதவி விலக வலியுறுத்தி தொடர்ந்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று அதிகாலை முதல் கொழும்பின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில் காலிமுகத்திடல் பகுதியில் பலத்த காற்றுக் காரணமாக கோட்டா கோ கம பகுதியில் போராட்டக்காரர்களின் கூடாரங்கள் தூக்கி எறியப்பட்டு சேதமடைந்துள்ளன.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு வரிச் சட்டங்களில் திருத்தம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

நடப்பு பொருளாதார நெருக்கடியினால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குறை நிரப்பு யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி 695 பில்லியன் ரூபாவை பொதுமக்களின் நிவாரணத்துக்காக ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை வரி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில பிரதமர் முன்வைத்த உள்நாட்டு இறைவரி சட்டம், பெறுமதிசேர் வரி சட்டம், தொலைத்தொடர்பு சட்டம், நிதி முகாமைத்துவ சட்டம், பந்தய சூது சட்டம் போன்றவற்றை திருத்துவதற்கான யோசனைகளுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இந்த யோசனை திருத்தங்கள் பாராளுமன்றில் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படவுள்ளன. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா:31 சூரி 3 செவ் 5 இல் உயரம்:5'11"<br>தகைமை/தொழில்:BBA(India) Income Auditor - DUBAI அரச<br>எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுள்ள A/L இற்கு மேற்பட்ட கல்வித் தகைமையுள்ள பெண்<br>தொ.இ: B/9979 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 33 சூரி 5 செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:பட்டதாரி உதவிப்பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ:G/10086 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 3<br>கி.பா:47 சூரி 4 செவ் 5<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: கடை<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும் தொழிலுள்ளவர்.<br>தொ.இ: B/9987 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா:68 சூரி .செவ் 1 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:உதவிக் கணக்காளர் சுவிஸில் பிறந்து வளர்ந்தவர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/10094 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா:46 சூரி 2 செவ் 3 உயரம்:5'9"<br>தகைமை/ தொழில்: பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/9990 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: சூரி.செவ் 7இல்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: அரச தொழில் தையல் போதனாசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன்<br>தொ.இ:G/10107 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம் 1<br>கி.பா:36 ¾ சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L(நீதிமன்ற புத்தகக்கட்டுநர்<br>எதிர்பார்ப்பு :ஆசிரியர் விரும்பத்தக்கது வேலை இல்லாதவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/9997 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்:கால்நடை வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/10114 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 60

# பிறருக்கு கிடைப்பதை நீ அடைய நினைத்தால் பலரை இழக்க நேரிடும்



"சிறு வயதில் நான் மிகுந்த சுயநலக்கார னாக இருந்தேன். நல்ல பொருட்கள் எது கிடைத்தாலும், அதை நானே கைப்பற்றிக் கொள்வேன்.

இந்தக் குணத்தின் காரணமாகவே, மெது வாக எல்லோரும் என்னை விட்டு விலக ஆர ம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் எனக்கு நண்பர் களே இல்லாமல் போய் விட்டார்கள். நானோ என் மீது தவறு இருக்கிறது என்றே நினைக்க வில்லை.

மற்றவர்களைக் குறை சொல்லிக் கொண்டி ருந்தேன். அந்தச் சமயத்தில் என் அப்பா எனக்குக் கற்றுக் கொடுத்த மூன்று வாக்கிய ங்கள் தான் எனது வாழ்க்கைக்கு உதவியாக இருந்தன.

ஒருநாள் அப்பா, இரண்டு அகலமான பாத்திரங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். அந்த இரண்டையும் சாப்பாட்டு மேசை மேல் வைத்தார். ஒரு பாத்திரத்திலிருந்த நூடுல்ஸின் மேல் மட்டும் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது.

இன்னொன்றின் மேல் முட்டையில்லை. அப்பா என்னிடம் கேட்டார்... 'கண்ணு... உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, நீயே எடுத்துக் கொள்!' என்றார். அந்த நாட்களில் முட்டை கிடைப்பது அரிதாக இருந்தது.

புத்தாண்டின் போதோ, பண்டிகைகளின் போதோ தான் எங்களுக்குச் சாப்பிட முட்டை கிடைக்கும். எனவே, நான் முட்டை வைத்திருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன்.

நாங்கள் சாப்பிட ஆரம்பித்தோம். என்னுடைய புத்திசாலித்தனமான முடிவுக்காக எனக்கு நானே என்னைப் பாராட்டிக் கொண்டேன். முட்டையை ஒரு வெட்டு வெட்டினேன். என் தந்தை அவருடைய கிண்ணத்தை எடுத்து சாப்பிட ஆரம்பித்த போது எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அவருடைய கிண்ணத்தில் நூடுல்ஸுக்கு அடியே இரண்டு முட்டைகள் இருந்தன.

அதைப் பார்த்து விட்டு நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவசரப்பட்டு நான் எடுத்த முடிவுக்காக என்னை நானே திட்டிக் கொண்டேன். அப்பா மென்மையாகச் சிரித்தபடி என்னிடம் சொன்னார்...

"மகனே நினைவில் வைத்துக் கொள்... உன் கண்கள் பார்ப்பது உண்மையில்லாமல் போகலாம். மற்றவர்களுக்குக் கிடைப்பதை நீ அடைய வேண்டும் என நினைத்தால் இழப்பு உனக்குத் தான்."

அடுத்த நாளும் என் அப்பா இரண்டு பெரிய கிண்ணங்கள் நிறைய் நூடுல்ஸ் சமைத்துக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையில் வைத்தார்.

முதல் நாளைப் போலவே ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸின் மேல் ஒரு முட்டை வைக்கப்பட்டிருந்தது. இன்னொன்றில் இல்லை. அப்பா என்னிடம் கேட்டார்...

"மகனே... உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, நீயே தேர்ந்தெடுத்துக் கொள்!" இந்த முறை நான் கொஞ்சம் புத்திசாலித்தனமாக யோசித்தேன். முட்டை வைக்கப்படாத கிண்ணத்தை எடுத்துக் கொண்டேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

நூடுல்ஸை அள்ளும் குச்சியால், கிண்ணத்துக்குள் அடிவரை எவ்வளவு துழாவிப் பார்த்தும் ஒரு முட்டை கூடக் கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி சொன்னார்...

'மகனே... எப்போதும் அனுபவங்களின் அடிப்படையிலேயே ஒன்றை நம்பக் கூடாது. ஏனென்றால், சில நேரங்களில் வாழ்க்கை உன்னை ஏமாற்றக் கூடும். தந்திரத்தில் விழ வைக்கும். இதை ஒரு பாடமாக எடுத்துக் கொள். இதை எந்தப் பாடப்புத்த கங்களிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியாது.'

மூன்றாவது நாள், அப்பா மறுபடியும் இரு பெரிய கிண்ணங்களில் நூடுல்ஸ் சமைத்து எடுத்து வந்தார். இரு கிண்ணங்களையும் மேசையின் மேல் வைத்தார். வழக்கம் போல ஒரு கிண்ணத்திலிருந்த நூடுல்ஸில் முட்டை மற்றொன்றில் இல்லை. அப்பா கேட்டார்... 'மகனே நீயே தேர்ந்தெடுத்துக் கொள். உனக்கு இவற்றில் எது வேண்டும்?' இந்த முறை அவசரப்பட்டு கிண்ணத்தை எடுத்து விடாமல் நான் பொறுமையாக அப்பாவிடம் சொன்னேன்...

'அப்பா நீங்கள் தான் இந்தக் குடும்பத்தின் தலைவர். நீங்கள் தான் நம் குடும்பத்துக்காக உழைக்கிறீர்கள். எனவே, முதலில் நீங்கள் உங்களுக்கான கிண்ணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றதை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றேன்.

அப்பா என் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. முட்டை இருந்த நூடுல்ஸ் கிண்ணத்தை எடுத்துக் கொண்டார். நான் எனக்கான நூடுல்ஸைச் சாப்பிட ஆரம்பித்தேன். நிச்சயமாக இந்தப் பாத்திரத்தில் முட்டை இருக்காது என்று தான் நினைத்தேன். அன்றைக்கும் எனக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. கிண்ணத்தின் அடியில் இரண்டு முட்டைகளிருந்தன.

அப்பா கண்களில் அன்பு கனிய என்னைப் பார்த்தார். பிறகு புன்முறுவலோடு சொன்னார்... 'மகனே, நினைவில் வைத்துக் கொள். மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும் போதெல்லாம், உனக்கும் நல்லதே நடக்கும்!'

அப்பா சொன்ன இந்த மூன்று வாசகங்களை, வாழ்க்கைப் பாடங்களை எப்போதும் நான் நினைவில் வைத்திருக்கி றேன். அதன்படி தான் நான் செயலாற்றுகிறேன்.

உண்மையைச் சொல்லப் போனால், நான் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறேன்.



VG Jana

# தாய்...

# தாய்வானின் வா...

# 30 போர் விமா...



(பீஜிங்) —

தாய்வான் தன...
விமானங்களை...
நிறுத்தியுள்ளதா...

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த இந்தச் சம்பவம் ஜனவரி மாதத்திற்குப் பிறகு நடந்துள்ள மிகப் பெரிய ஊடுருவலாகக் குறிப்பிடப்படு கிறது.

தாய்வான் மீது சீனா படையெடுக்கக் கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீனாவை எச்சரித்த சில நாட்களுக்குப் பிறகு இது நடந்துள்ளது.

கடந்த சில மாதங்களில் சீனா தனது வான்வழி ஊடுருவல்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. அதோடு, அவற்றை பயிற்சிகள் என்றும் கூறுகிறது.

இத்தகைய நகர்வுகள், தாய்வானை கோபப்படுத்தியதோடு, அந்தப் பிரா ந்தியத்தில் பதற்றத்தையும் அதிகரித்து ள்ளது.

தன்னிடம் இருந்து பிரிந்து சென்ற மாகாணமாகவும் தேவை ஏற்பட்டால், அதை பலவந்தமாக மீண்டும் இணை க்கலாம் என்ற வகையிலுமே சீனா தாய்வானை பார்க்கிறது.

சமீபத்திய ஊடுருவல் சம்பவத்தில்

## ஈரானிடம் உச்ச வரம்பை விட

# அதிக யுரேனியம்

## சர்வதேச அணுசக்தி முகமை எச்சரிக்கை


(வோஷிங்டன்)

யுரேனிய உலோகத்தைக் கொண்டு அணு ஆயுதங்களை தயாரிக்க முடி யும் என்பதால், இவற்றை கட்டுப்படு த்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கவலை தெரிவித்து வருகின்றன.

கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரி க்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் போடப்பட்ட அணுசக்தி பரவல் ஒப்பந் தத்தின்படி ஈரான் 300 கிலோ யுரேனியத்தை மட்டுமே வைத் திருக்க வேண்டும் என உச்ச வர ம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது.

ஆனால் தற்போது ஈரான் 3809 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை கையிருப்பு வைத்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமை குற்றம்சாட்டியு ள்ளது.

இது ஈரானுக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பை விட 13 மடங்கு அதிக



யுரேனியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனிய உலோக உற்பத்தி பல மடங்கு அதிகரி த்துள்ளதாகவும் சர்வதேச அணுசக்தி முகமை எச்சரித்துள்ளது.

யுரேனிய உலோகத்தை கொண்டு அணு ஆயுதங்களை தயாரிக்க முடியும் என்பதால், இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கவலை தெரிவித்து வருகின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் VS சீனா

# ன் பாதுகாப்பு மண்டலத்திற்குள் னங்களை அனுப்பிய சீனா

**னது வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் சீனா அனுப்பிய 30 போர் ள எச்சரித்துத் தடுப்பதற்காக தனது போர் விமானங்களை நிலை தாகத் தெரிவித்துள்ளது.**



22 போர் விமானங்கள், மின்னணு போர்முறைக்கான கருவிகள், நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்கள் ஆகியவை பங்கேற்றன என்று தாய்வானின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒரு வான் பாதுகாப்பு அடையாள மண்டலம் என்பது ஒரு நாட்டின் நிலப்பரப்பு மற்றும் தேசிய வான் வெளிக்கு வெளியே இருக்கும் ஒரு பகுதி. ஆனால், வெளிநாட்டு விமானங்கள் இங்கு தேசிய பாதுகாப்பு நலனுக்காக அடையாளம் காணப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்தப் பகுதி, சர்வதேச வான்வெளியாக இருந்தாலும், வான் பாதுகாப்பிற்காக அந்தப் பகுதியைத் தனது கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதாக தாய்வான் அறிவித்துள்ளது.

தாய்வான் ஓராண்டுக்கும் மேலாக சீன விமானங்கள், அதன் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்குள் பறக்கின்றன. இந்த ஊடுருவல்கள், தாய்வான் அரசாங்கம் முறையான சுதந்திர பிரகடனத்தை நோக்கி நகர்வதற்கு எதிரான ஓர் எச்சரிக்கை என்று ஆய்வாளர்கள் முன்பு கூறியுள்ளனர்.

"தாய்வானுக்கு மிக அருகில் பறப்பதன் மூலம் சீனா ஆபத்தோடு விளையாடுகிறது" என்று பைடன் தெரிவித்தார். மேலும், "பீஜிங் தாய்வானை ஆக்கிரமித்தால் அமெரிக்க இராணுவம் பதிலளிக்கத் தயாராக இருக்க வேண்டும்," எனக் கூறியதன் மூலம், சீனாவுக்குத் தனது வலுவான எச்சரிக்கையையும் விடுத்திருந்தார்.

அவருடைய வார்த்தைகள், தாய்வான் மீதான அமெரிக்காவின் நீண்டகால கொள்கையான ராஜ்ஜீய ரீதியிலான தெளிவின்மையில்" மாற்றத்தைக் குறிப்பதாகத் தோன்றியது.

சீனா, தாய்வான் அமெரிக்காவோடு கூட்டு சேர்வதை எச்சரிக்கும் வகையில், கடந்த வாரம் தாய்வானைச் சுற்றி ஒரு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டதாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நேபாளத்தில் விழுந்து நொருங்கிய விமானத்தின் கறுப்புப் பெட்டி கிடைத்தது

(காத்மண்டு)

நேபாளின் மஸ்டாங் மாவட்டத்தில், விமான விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து தற்போது கறுப்புப் பெட்டி கிடைத்துள்ளதாக ஏஎன்ஐ செய்தி முகமை செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, நேபாள் இராணுவ செய்தித் தொடர்பாளர், இதுவரை 21 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. விபத்து நடந்த இடத்திலிருந்து கறுப்புப் பெட்டியும் கிடைத்துள்ளது.

பருவநிலை ஏற்புடைய வகையில் இருந்தால், தேடுதல் மற்றும் மீட்புப் பணி இன்றுடன் முடிவுக்கு வரலாம்," என்றும் தெரிவித்தார். (நி-6)

## கைத்துப்பாக்கி உரிமையை முடக்குவதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் அறிவிப்பு

(ஒட்டாவா)

அமெரிக்காவில் 21 பேரின் உயிரைக் காவு கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அதன் அண்மைய நாடான கனடா, கைத்துப்பாக்கி உரிமையை முடக்குவதாக அறிவித்துள்ளது.



கனடாவில் கைத்துப்பாக்கிகளை பயன்படுத்த தடை விதிக்கும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிறைவேற்றப்பட்ட சட்டம் அமுலுக்கு வரும் போது, கைத்துப்பாக்கிகளை வாங்க,விற்க இறக்குமதி செய்ய முடியாது. விளையாட்டு மற்றும் வேட்டைக்கு மட்டும் கைத்துப்பாக்கிகளை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படும்.

முன்மொழியப்பட்ட சட்டமானது, வீட்டு வன்முறையில் ஈடுபடுவோர் அல்லது அவர்களது துப்பாக்கி உரிமத்தைப் பின்தொடர்வதுடன், தமக்கோ அல்லது பிறருக்கோ ஆபத்து என்று கருதப்படுபவர்களிடமிருந்து துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதுடன், எல்லைப் பாதுகாப்பையும், துப்பாக்கிக் கடத்தலுக்கான குற்றவியல் தண்டனைகளையும் பலப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது ஐந்து தோட்டாக்களுக்கு மேல் வைத்திருக்கும் திறன் கொண்ட நீண்ட துப்பாக்கி இதழ்களையும் தடை செய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதியை தடுக்கும் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம்

(பிரஸ்ஸல்ஸ்)

ரஷ்யாவின் மூன்றில் இரண்டு பங்கு கொண்ட எண்ணெய் இறக்குமதியை தடுக்கும் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.

எனினும் இதற்கு ஹங்கேரி எதிர்ப்பை வெளியிட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதானி சார்ல்ஸ் மிச்செல் இதனை அறிவித்துள்ளார்.

இந்த இணக்கப்பாடு ரஷ்யப் போருக்கான பாரிய நிதி ஆதாரத்தை தடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ரஷ்யா மீதான அதிகபட்ச அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதானி சார்ல்ஸ் மிச்செல் தெரிவித்துள்ளார்.

பிரஸ்ஸல்ஸில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் உச்சிமாநாட்டில் குறித்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவின் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பால் உக்ரைனின் பொருளாதாரம் பின்னடைந்துள்ளதுள்ளமையினால் உக்ரைனின் பொருளாதாரத்தை சீரமைக்க ஐரோப்பிய ஒன்றியத்தினால் 9 பில்லியன் யூரோவை உதவியாக வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிஷாவின் மரணத்திற்கு நீதிகோரி

# வடக்கு- கிழக்கில் நேற்று போராட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

**சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு-கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நீதிக்கான போராட்டம் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் இடம்பெற்றது.**







குறித்த போராட்டத்தில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல நூற்றுக்கணக்கான பெண்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் வலையமைப்பினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரியும் தொடர்ச்சியாக நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும் அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள், சிறுவர்களுக்கு விரைவில் நீதி நிலை நாட்டப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டம் இடம்பெற்றது.

(4-6-33-281-285-250-316)

## வவு.குடியிருப்பு பகுதியில் சண்டையிட்ட யானைகள்

### அச்சத்தில் மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியா, மகாகச்சக்கொடிய கிராமத்திற்கு அருகில் இரண்டு காட்டு யானைகள் சண்டையிட்டு கொண்ட சம்பவம் கிராம மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

வனவிலங்கு அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கையில், இரண்டு யானைகளும் தங்கள் பகுதியில் அதிகாரத்தை பெறுவதற்காகவே சண்டையிட்டுக் கொண்டதாக தெரிவித்தனர்.

இரண்டு யானைகளும் சுமார் இரண்டு நாட்களாக குறித்த பகுதியில் இருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். இச் சம்பவத்தை பார்வையிட அதிகளவான மக்கள் அப்பகுதியில் குழுமியிருந்தனர். (4-6-299)

## அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய(காளி கோயில்) வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை மாலை பிற்பகல் 6 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய அலங்கார உற்சவத்தில் பத்தாம் நாளான எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், மறு நாள் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகப் பொங்கலும் இடம்பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)



உலக புகையிலை எதிர்ப்பு தினமான நேற்று முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் விழிப்புணர்வு நடைபவனி இடம் பெற்றது. (படம்- ஜோசப்நயன்)

## தமிழக உதவிப் பொருட்கள் மன்னாரிற்கு பகிர்ந்தளிப்பு



(மன்னார்)

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் நாட்டு மக்களால் அனுப்பி வைக்கப்பட்ட அத்தியாவசிய உணவு பொருட்கள் நேற்று முன்தினம் மன்னார் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் 25,000 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசி மற்றும் பால்மா மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டிமெலிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பொருட்களை வழங்கி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது. (4-6-285)

### பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமானது

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் அதிகாலை பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகியது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கம் காரணமாக இரண்டு வருடங்கள் பக்தர்கள் ஆலயத்துக்கு வருகின்ற நிகழ்வானது தடை செய்யப்பட்டு ஆலய நிர்வாகத்தினர் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆலய சம்பிரதாய கிரியைகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் இம்முறை கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் ஆலயக் கிரியைகள் சிறப்புற ஆரம்பமாகியுள்ளன.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுடன் [illegible] தொடர்பை பேணி வந்த [illegible] யானவர்களுக்கு மரவு வழியாக அறிவிப்பதற்காக அவர்களது வீடுகளுக்கு சென்று பாக்குத்தெண்டல் இடம்பெற்றது.

இவ்வாண்டுக்கான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து 13 ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி [illegible] ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரியும் நினைவுகள்...

## “தமிழினத்தின் முதுசம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 41 வருடங்கள் நிறைவு”



அப்போது எனக்கு வயது ஒன்பது. யாழ்.நகரிற்கு அப்பாவுடன் ரலிச் சைக்கிளின் பின் கரியலில் இருந்து பயணிக்கின்றேன்.

வீதி எங்கும் குண்டும் குழியுமாய் காட்சி தருகிறது. அவற்றை விலகியபடி மிகவும் சிரமப்பட்டு அப்பா சைக்கிளை ஓடிக்கொண்டிருக்கிறார்.

நான் அப்பாவிடம் கேட்கின்றேன் “அப்பா ஏன் இந்த வீதிகள் இவ்வளவு மோசமாக இருக்கின்றன?” என. அதற்கு அப்பா “போர் தமிழினத்தின் ஒட்டுமொத்த வளத்தையும் அழித்து விட்டது” என்று கூறுவதற்குள் பிளேன் இரையும் சத்தம் காதைக் கிழித்தது. வீதி எங்கும் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு மரங்களிற்குள் மறைந்து கொண்டனர்.

அப்பாவும் நானும் ஒரு மரத்தடியில் பதுங்கினோம்.

“குத்துறான்... குத்துறான்.... படுங்கோ” என்ற அவலக் குரலோசை கேட்டு அனைவரும் நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டனர். அந்த இடத்தையே அதிரும்படி மூன்று குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

எங்கும் புகை மயம். அவலக் குரல்கள் ஒலித்தன. மீட்புப் பணியாளர்கள் இறந்தவர்களை தவிர்த்து காயமுற்றவர்களை மீட்டு யாழ்.மருத்துவமனை நோக்கி விரைந்து ஓடினர். பதற்றத்துடன் அப்பா என்னை அவசரமாக அழைத்துக் கொண்டு யாழ்.நகர் நோக்கி விரைந்தார் சைக்கிளில்.

பின் கரியலில் இருந்த எனக்கு “ஏன் இவை நடக்கின்றன. நாம் என்ன பிழை செய்தோம். ஏன் இப்படிச் செய்கிறார்கள்? என்ற கேள்வி எழுந்துகொண்டேயிருந்தது.

நாம் யாழ்.நகரிற்கு அண்மையாக வந்துவிட்டதை அப்பாவின் குரல் உணர்த்தியது. “அங்கே பார் அதுதான் யாழ்ப்பாண நூலகம்” என்று காட்டினார்.

சமையல் முடிந்து கழுவாமல் இருந்த சோற்றுப் பானையை கவிழ்த்து வைத்தது போல் இருந்த அந்த சிகரங்கள் அவ்வளவு கருமையாய் காட்சி தந்தன. கல்விக்கு அதிபதியாம் சரஸ்வதி சிலை புகைமண்டி சோபை இழந்து கிடந்தாள். எங்கும் புதர் மண்டிக் காணப்பட்டது. நான் மெதுவாக அப்பாவிடம் கேட்டேன் “அப்பா நூலகம் என்கிறீர்கள் ஏன் இப்படி பாழடைந்து கிடக்கின்றது” என.

அதற்கு அப்பா கூறினார். “தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகம் என்ற பெருமையுடன் ஓலைச்சுவடிகள், வரலாற்று நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800 களில் வெளியான யாழின் பல பத்திரிகைகளின் மூலப்பிரதிகள் என சுமார் 97 ஆயிரம் நூல்களை தன்னகத்தே கொண்ட தமிழினத்தின் சொத்தை 1981 ஆம் ஆண்டு 1 ஆம் திகதி சிங்களப் பேரினவாதிகள் தீயிட்டு எரித்தார்கள். தமிழினத்தின் பண்பாட்டின் ஒருபகுதி அந்த இனவெறி பிடித்தவர்களால் அழிக்கப்பட்டது” என்றார்.

அப்போது அப்பா சைக்கிளை இன்னும் வேகமாய் மிதிப்பதை என்னால் உணர முடிந்தது. அப்பாவின் கண்களின் ஓரம் நனைந்ததையும் அதை அவர் தனது கையால் துடைத்ததையும் கண்டு அளவிட முடியாத எமது அந்த சொத்தின்மதிப்பை உணர்ந்து கொண்டேன்.

“ஏனப்பா கொளுத்தினார்கள்?” சற்றுக் கோபத்துடன் வினவினேன்.

“தமிழினம் எப்போதும் அடிமையாய் இருக்க வேண்டும் என்ற வெறி கொண்டவர்களின் சிறுமைப் புத்தியே எம் பொக்கிஷம் எரியக் காரணமாயிற்று”.

“அதற்காக ஏன் அப்பா நூலகத்தை எரிக்க வேண்டும்?” எனது கேள்வி இது.

“நீ கேட்பது நியாயமானது. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அவர்களின் பண்பாடு, கலாசாரத்தை உடைத்தாலே போதும். அந்த இனம் தானாகவே அழிந்துவிடும். எமது இனத்தின் வரலாறுகள் பொதிந்து கிடந்த இடம் யாழ்ப்பாண நூலகம். இந்தப் பூமியின் ஆதிக்குடி தமிழ்க்குடி என்பதை, இந்தப் பொக்கிஷங்கள் இருந்தால் தானே கூறமுடியும். அதை எரித்து விட்டால்...”

மீண்டும் அவரின் கண்களின் ஓரம் நனைகிறது. அதன் பின்பு அவர் பேசவேயில்லை.

எமது இனத்தின் பொக்கிஷத்தை இனவாதிகளால் அழிக்க முடியும். ஆனால் எமது இனத்தை எவராலும் அழித்து விட முடியாது. எமது பண்பாடு, கலாசாரத்தை எவராலும் அழித்து விட முடியாது என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன்.

இப்போது நான் நாற்பத்தொரு வயது நிறைந்த ஒருவன். ஏனோ எனக்கும் அந்த நூலகத்திற்கும் ஒரு பூர்வ ஜென்ம பந்தமுண்டு என்பதை காலம் சுட்டி நிற்கிறது.

எரிந்தாலென்ன, எரித்தாலென்ன நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையை இன்றும் எனக்குத் தந்தபடி நிமிர்ந்து நிற்கின்றது. தமிழினத்தின் முதுசமாம் யாழ்ப்பாண நூலகம்.

**மாவை.நா.கஜேந்திரன்**

## துவிச்சக்கர வண்டிகளின் விலை 100 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

டொலர் பிரச்சினை காரணமாக துவிச்சக்கரவண்டிகளின் விலைகள் நூற்றுக்கு நூறு வீதம் உயர்ந்துள்ளதாக துவிச்சக்கரவண்டி தயாரிப்பாளர்கள் மற்றும் பொருத்துநர்கள் சங்கத்தின் செயலாளர் றிஸ்னி இஸ்மத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சுமார் 18 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த மவுன்டன் ரக துவிச்சக்கர வண்டி மற்றும் பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி என்பவற்றின் விலைகள் 36 ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்துள்ளன. சாதாரணமாக துவிச்சக்கரவண்டிகளுக்கான உதிரிப் பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, இலங்கையில் பொருத்தப்படுகின்றன.

துவிச்சக்கரவண்டி களுக்கான உதிரிப் பாகங்கள் ஆடம்பரப் பொருட்கள் பட்டிய லில் சேர்க்கப்பட்டு 55 வீதம் வரி அறவிடப்படுவதால், துவிச்சக்கரவண்டிகளின் விலைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளது. துவிச்சக்கரவண்டி உதிரிப் பாகங்களை ஆடம்பரப் பொருட்கள் பட்டியலில் இருந்து நீக்கி, வரியை பூஜ்ஜியமாக குறைத்தால், ஒரு துவிச்சக்கரவண்டியை 19 ஆயிரம் ரூபாவுக்கு நுகர்வோருக்கு வழங்க முடியும்.

எவ்வாறாயினும் துவிச்சக்கரவண்டிகளின் விலைகள் அதிகரித்தாலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சந்தையில் கேள்வி அதிகரித்துள்ளது. துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ள மக்கள் விலை அதிகரிப்பு காரணமாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் மரக்கறிகளின் விலை மீண்டும் வெகுவாக அதிகரித்துள்ளது. கரட், பீட்ரூட், போஞ்சி, உருளைக்கிழக்கு, கோவா மற்றும் தக்காளி உள்ளிட்டவற்றின் விலை இவ்வாறு அதிகரித்துள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையம் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருணசாந்த ஹெட்டி யாராச்சி தெரிவித்தார். (நி-6)




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 360 |
| உருளைக்கிழங்கு | 230 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 |
| தக்காளி | 600 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 120 |
| கோவா | 250 | 280 | 320 |
| கரட் | 200 | 400 | 400 |
| பூசணி | 120 | 120 | 160 |
| புடோல் | 260 | 200 | 280 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 250 | 230 | 240 |
| பாகற்காய் | 650 | 700 | 500 |
| வெண்டக்காய் | 160 | 200 | 350 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 140 | 280 | 320 |
| பீற்றூட் | 380 | 350 | 400 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 1200 | 1200 |
| போஞ்சி | 800 | 700 | 600 |
| கத்தரிதம்புள்ள | 260 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 100 |
| தேசிக்காய் | 550 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 300 | -- |
| முள்ளங்கி | 140 | 160 | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்



## அம்புலிமாமா

## அனுபவபூர்வக் கல்வி

(நேற்றைய தொடர்ச்சி)

அந்த அழைப்பில். அச்சுதன் "ஐயா, என் திறமையைப் பாராட்டி மன்னர் என்னைப் பொதுக் கூட்டத்தில் கௌரவிக்கப் போகிறார். அதுசமயம் தாங்களும் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டால் எனக்குப் பெருமையாக, இருக்கும்" என்று எழுதி இருந்தான். அதைப் படித்து விட்டு விமலானந்தர் தம் சீடர்களோடு தலைநகருக்குச் சென்றார்.

அங்கு மாபெரும் கூட்டத்தில் மன்னன் அச்சுதனைப் பாராட்டிப் பண முடிப்பும் பரிசுகளும் அளித்தான். அவனைப் பல கவிஞர்கள் தம். கவிதைகளால் பாராட்டினார்கள். அச்சுதனோ தன் குருவை மேடைக்கு வரவழைத்துத் தான் பெற்ற பரிசுகளை எல்லாம் அவரது காலடியில் வைத்து வணங்கினான். விமலானந்தரும் 'என் சீடனை இந் நிலையில் கண்டு பெருமிதம் கொள்கிறேன்" என யாவரும் கேட்கக் கூறினார். அப்போது முத்துவும் மற்ற சீடர்களும் தம் குருவையே பார்த்தார்கள். மோகனன் முத்துவிடம் "இவர் எல்லாச் சீடர்களிடமும் அவர்களைப் பார்த்துப் பெருமைப்படுவதாகக் கூறியே வருகிறார். இந்த அச்சுதன் ஒரே வருடத்தில் படித்து விட்டு குருகுலத்தை விட்டுச் சென்றான். நானோ ஆறு வருடங்களாகக் கல்வி கற்று வருகிறேன். இன்னமும் என் படிப்பு முடிந்தது என்று குருநாதர் சொல்லவில்லை" என்றான்.

அதுகேட்டு முத்துவுக்கு திகில் பிடித்தது. அன்றிரவு அவன் சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் மன்னன் விமலானந்தரும் அவரது சீடர்களும் தங்கி இருந்த விடுதிக்கு வந்தான். அவன் விமலானந்தரிடம் "எனக்கு உடனடியாக என் பொக்கிஷ அதிகாரிக்கு உதவியாக பணிபுரிய திறமையான ஒருவர் தேவைப்படுகிறார். தாங்கள் தங்களது சீடர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

விமலானந்தர் தன் சீடர்களை நோக்கவே சட்டென முத்து முன் வந்து "குருவே!" என் படிப்பு முடிந்து விட்டது என்றே நினைக்கிறேன். தாங்கள் அனுமதித்தால் இப்பதவியை நான் ஏற்கிறேன்" என்றான். விமலானந்தரும் முத்துவை ஆசீர்வதித்து "நீயும் உன் திறமையால் உயர் பதவி பெற்று விரைவில் கௌரவிக்கப்படுவாய். இதுநாள் வரை நீ கற்றது உனக்கு உறுதுணையாக இருக்கும் சொல்லிக் கொடுத்ததைச் செயலாக்குபவனே நல்ல மாணவன்" என்று கூறினார்.

அப்போதுதான் முத்துவுக்குத் தன் குருவின் முறை சரியானது எனப் புரிந்தது. மாணவன் தான் கற்றதைச் செயல் முறையில் கொண்டு வர முடியும் என உறுதியாக நம்பினால் அவனது கல்வி முடிந்தது எனத் தன் குரு முடிவு செய்வதை உணர்ந்தான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




உன் போர்க்களத்து வீரத்தைக் காட்டிப் பெருமைப்படுகிறாய்; வாழ்க்கைக் களத்தில் அப் பேராண்மை இருக்க வேண்டாவா? பிறன்மனை நோக்காத பேராண்மை உனக்குப் பீடு நடையும் பெருமையும் தருமே! ஒழுக்கம் விழுப்பம் தருமே! ஒழுக்கம் இன்மை கேடு தருமே! என்று தொடர்ந்து கூறினாள்.

நேராய் அவனொடு முகம் கொடுத்துப் பேசி, அவனைப் பெருமைப்படுத்த அவள் விரும்பவில்லை; அப் பார்வையும் அவனுக்கு வெறியை உண்டாக்கிக் கெடுத்து விடும்; அதனால் ஒரு துரும்பை எடுத்துப் போட்டு, அதனைப் பார்த்து விளித்து, இக் கருத்துகளைக் கூறினாள்; "அற்ப மனிதன், என்று கூறிய அவனை அவள் ஓர் அற்பப் புழுவாகக்கூட அவள் மதிக்கவில்லை; ஜீவனுள்ள பொருளாய் மதிக்க விரும்பவில்லை.

கிள்ளை மொழி போலப் பேசுவதாய் அவன் அவற்றை எடுத்துக் கொண்டான். அவள் பேச்சு ஒவ்வொன்றும் அவன் ஏக்கத்தால் விடும் பெருமூச்சுக்குக் காரணமாய் அமைந்தன; "நீ இல்லாமல் நான் இல்லை" என்று சோக கீதம் பாடினான்; 'நோய்க்கு அவள்தான் மருந்து' என்று வற்புறுத்திக் கூறினான்; தானாய்ப் பழுக்காத பழத்தை அடித்துப் பழுக்க வைக்க நினைத் தான்; அது பழுது ஆகிவிட்டது; அச்சுறுத்தினால் அவள் நிச்சயம் பணிவாள்; நயப்புரை பேசினால் தன்னை நாடுவாள் என்று எதிர் பார்த்தான்; இரண்டிலும் தோல்வி அடைந்தான். "இன்னும் இரண்டு மாதம் தவணை தருகிறேன்" என்று தெரிவித்தான். "காலில் விழுந்து வணங்கிக் கேட்கிறேன். மறுத்தால் என் வாளில் விழுந்து நீ மடிய வேண்டுவது தான்" என்று இறுதி உரை கூறி எச்சரித்தான்.

ஆதிக்க வெறி அவனை ஆட்கொண்டது; அதிகாரத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்தான்; சீதைக்குக் காவலாய் நின்ற அரக்கியருக்கு அவளைப் பணிய வைக்கும்படி ஏவல் இட்டான். "இன்னுரை கூறியாவது வன்முறைச் செயலாலாவது அவளைப் படிய வைக்க வேண்டும், என்று முடிவாகக் கூறிச் சென்றான். அரக்கியர் ஆவேசம் கொண்டனர். "கொல்லுமின்; தின்னுமின்" என்று கூறி, அவளைச் சுற்றி வட்டமிட்டனர்; பேய்க் கூட்டமாய் மாறிக் கூத்திட்டு அச்சுறுத்தினர்; அருவருப்பான அக் காட்சி சீதைக்கு வெறுப்பு ஊட்டியது; வேதனையைத் தந்தது; இராவணனை எதிர்க்க முடிந்தது; இப் பேய்க் கூட்டத்தை ஓட்ட முடியவில்லை; திரிசடை இடைமறித்தாள்.

'ஆட்சி நிலைக்கும் என்று ஆரவாரம் செய்கிறீர்; நாளை ஆட்சி மாறினால் அதிகாரிகளின் நிலையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்' என்று குறிப்பாய் அறிவுறுத்தினாள்; அடிமைகள் அவர்கள்; அதனால் அடங்கி நின்றனர்; அரசனின் ஆணைக்கு அஞ்சிப் புறக்காவல் மட்டும் மேற்கொண்டு ஒதுங்கினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயல்கள் நம்மைத் துன்புறுத்துவது அவற்றைச் செய்த காலத்தில் அன்று. வெகு காலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும்போதுதான்.

– ரூஸோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறுமைத்தனம் கொண்ட ஆட்சியாளர்களால் அழிந்த நாடு இது

ஆதிகாலத்தில் சில நாடுகள் அழிந்து போனதான வரலாறுகளை அறியும்போது, இயற்கை அனர்த்தம், கொள்ளை, களவு, சூறையாடல், பகைமை, கொலை போன்ற வற்றால் அந்த அழிவு ஏற்பட்டதான கதைகள் உண்டு.

அதாவது மன்னர் ஆட்சியில் ஏற்பட்ட தனி மனித அறியாமையும் ஆற்றல் இன்மையும் காரணமாக அண்டை நாடுகள் போர் தொடுத்ததாலும் நாட்டின் செல்வத்தைக் கபளீகரம் செய்ததாலும் குறித்த நாடுகள் அழிவுற்றுப் போயின.

ஆனால் ஆளும் தரப்புச் செய்த சூறையாடலால் ஒரு நாடு வறுமைப்பட்டு பஞ்சம், பசியில் இன்னலுற்றது என்றால், அது இலங்கையாக மட்டுமே இருக்க முடியும்.

ஆம், அரசன் – ஆட்சியாளன் என்றால், அவன் தன்னிடம் இருக்கின்ற செல்வங்களையெல்லாம் மக்களுக்கு வாரி வழங்க வேண்டும். இல்லையென்று வருவோர்க்கு ஈந்தளிக்க வேண்டும்.

ஏழை மக்களின் வறுமை தீர்க்க வேண்டும். காணியற்றவர்களுக்குப் பூதானம், வீடற்றவர்களுக்கு இல் இடம் என ஈகை செய்ய வேண்டும். இதுவே ஆட்சியாளனின் இயல்பாம்.

ஆனால் இலங்கையில் மட்டும் நாட்டைச் சூறையாடுவது, தனவந்தர்களின் செல்வங்களைக் கபளீகரம் செய்வது, அழகான வீடு, உல்லாச விடுதி, வசதி நிறைந்த தனியார் வைத்தியசாலை எனக் கண்டால் அவற்றைத் தமக்குரியதாக்குவது என்ற சிறுமைத்தனம் இலங்கை ஆட்சியில் மட்டுமே உண்டு.

இந்த நிட்டூரத்தால், அழகாபுரியாக அறியப்பட்ட இலங்கை இன்று வறுமை கொண்ட நாடாக – உலகில் இரந்து வாழும் தேசமாக மாறிவிட்டது.

என்ன செய்வது என்ற ஏக்கத்தோடு என்றுதான் இந்த நாடு மீட்சி பெறும் என நினைக்கையில், இல்லை இலங்கை ஒரு போதும் மீட்சி பெற முடியாது என்பதாக நாட்டின் அரசியல் நிலைமை அமைகிறது.

ஆம், அண்மையில் தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்களின்போது அரசியல் வாதிகளின் வீடுகளும் உடைமைகளும் எரியூட்டப்பட்டன. இதனால் பலரும் பாதிப்படைந்தனர்.

இச்சம்பவத்தில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பூர்வீக வீடும் எரிந்து போயிற்று.

இதில் வேடிக்கை என்னவெனில், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் எரிந்த வீட்டைப் புனரமைக்க நூறு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எப்படி இருக்கிறது நிலைமை. காலத்துக்குக் காலம் தமிழர்களின் வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டபோது,

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தச் சொத்துக்களும் அழிக்கப்பட்டபோது,

ஏன்? அண்மையில் நடந்த அனர்த்தத்தில் எத்தனையோ பேரின் வீடுகள் எரியூட்டப்பட்ட போது அவற்றுக்கெல்லாம் இழப்பீடு தராத ஆட்சி நிர்வாகங்கள், முன்னாள் பிரதமர் மகிந்தவின் வீடு என்றவுடன் நூறு மில்லியன் ரூபாயை ஒதுக்குகிறது.

அட, இதைவிட்ட கேவலம் நாடு இருக்கும் நிலையில் அந்த நூறு மில்லியன் ரூபாய் எமக்கு வேண்டாம் என்று கூறமுடியாதவராக முன்னாள் பிரதமர் மௌனமாக இருப்பது தான்.

## எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் மின்வெட்டு அமுலாகும் விபரங்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மீண்டும் மின்வெட்டை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் ஜுன் மாதம் 2 ஆம் தொடக்கம் திகதி 5 ஆம் திகதி வரையான மின்வெட்டு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஜுன் 2 ஆம் திகதி மற்றும் 3 ஆம் திகதி 2 மணிநேரமும் ஜுன் 4 ஆம் திகதி ஒரு மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 5ஆம் திகதி மின்வெட்டு அமுலில் இருக்காது என தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை தொடர்பில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெள்ளம் அல்லது ஏனைய அனர்த்தங்களினால் பரீட்சார்த்திகள் திட்டமிடப்பட்ட பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாமல் போனால் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்குச் சென்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 02.06.2022 வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் மெனிக்பாம் வலயம் 2, சக்திகம மல்வத்து ஓயா, மெனிக்பாம் வலயம் 3- 2, மெனிக்பாம் வலயம் 4 ஆண்டிய புளியங்குளம், சுகாதார மையம், கதிர்காம நகர், கிறிஸ்தவ குளம், மெனிக்பாம் வலயம் 3-1, மெனிக்பாம், மெகின்பாம் (அறிவுத் தோட்டம்), முகத்தாங்குளம் 2 ஆவது பண்ணை, பீடியா பார்ம், பீடியா பார்ம் பழைய கிராமம், பெரிய காடு, புதுக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு கோடி மதிப்பிலான கடல் அட்டைகள் மீட்பு

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம் காத்தான் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த ஒரு கோடி மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் தப்பியோடியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம் காத்தான் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக பதப்படுத்தப்பட்ட சுமார் 200 கிலோ மதிப்புள்ள கடல் அட்டைகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இருந்தனர்.

இதன்போது பட்டணம் காத்தான் புறவழிச் சாலை பகுதியில் கேணிக்கரை பொலிஸார் இருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்ததில், ஒருவர் தப்பி ஓடினார்.

மற்றொருவர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்ததால் விசாரணை செய்ததில் இலங்கைக்கு படகு மூலம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் கடத்தப்பட இருந்தது தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்து விசாரணை செய்ததில், அவரிடம் இருந்த சுமார் 200 கிலோ நிறையுள்ள ஒரு கோடி மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்து, மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் கடத்தல் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் வடக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேல், சப்ரகமுவ, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பாகங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பாகங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவில் மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் வீசும் காற்றின் வேகம் 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

ம-மௌனமாக இருந்தார். குருதேவர் மறுபடியும் ம-வைப் பார்த்து, 'உன்ன்னத்தான் கேட்கிறேன்--- என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்? எனக்கு எத்தனை அணா ஞானம் இருக்கும்?'

ம--: 'அணா விஷயம் எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் இத்தகைய ஞானத்தையோ, பிரேம பக்தியையோ, நம்பிக்கையையோ, பற்றின்மையையோ பரந்த கருத்தையோ இதற்கு முன்பு நான் எங்குமே கண்டதில்லை.'

இதைக்கேட்டு குருதேவர் சிரித்தார்.

அதன்பிறகு -குருதேவரின் திருமுன் வீழ்ந்து வணங்கி விடை பெற்றார். வாசல் வரை சென்றவர், திடீரென எதையோ நினைத்துக் கொண்டு மறுபடியும் திரும்பி வந்தார்.

அந்த மங்கிய ஒளியில் குருதேவர் அப்போதும் நடந்து கொண்டிருந்தார். --தன்னந்தனியாக நடந்து கொண்டிருந்தார், யாருமே அருகில் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## நடராசா புஸ்பராசா

( தபாலதிபர் - அளவெட்டி )

ஆண்டுகள் பத்து ஆயிடினும்
என்றும் என் இதயத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கும்
என் அன்பு அப்பா...

அன்பு கொண்டு அரவணைத்து
பொத்தி பொத்தி வளர்த்த மகன்
துன்பம் என்ற சொல்லை
நீங்கள் பிரியும்வரை அறியவில்லை.

நடந்தவை கனவாகிப் போகாதோ?
மீண்டும் ஒருதரம் வாய்விட்டழைத்து
என்னை அரவணைக்க மாட்டீரோ?

இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து - மறு
ஜென்மத்தில் உம் மகனாகும் வரம் - வேண்டி
உம்பாதம் மலர்தூவி வணங்குகின்றேன்.

அன்னை மடியில் : 17.03.1957
ஆண்டவன் அடியில் : 01.06.2012

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(11691)

என்றும் நினைவுகளுடன்
மகன் பு. வினோத்

# 60ஆவது பிறந்ததினமும் 29ஆம் நாள் நினைவும்



கடந்த 04.05.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கதிரவேலு ஆனந்தசோதி

நாட்கள் இருபத்தொன்பது ஓடி மறைந்தாலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை!
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒழிவதில்லை...

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.06.2022) புதன் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை யிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 05.06.2022 ஞாயிற் றுக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி தெற்கு, இனுவில்.

(11694)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 ஆயிரம்...

ரீதியில் விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள் தொடர்பான விபரங்களை லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்தில் பார்வையிட முடியும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வாரம் எரிவாயு கொள்கலன் விநியோகத்தை லிட்ரோ நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மிருகக்காட்சி...

கள அதிகாரிகள் விவசாய, வனவிலங்கு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் தெரிவித்துள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் விலங்கியல் திணைக்கள அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததாலும், உணவுப் பொருட்களின் விலையேற்றத்தாலும் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக உயிரியல் பூங்கா அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பட்ஜெட்டில் அரசு ஒதுக்கிய பணமும் முடிவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிருகக்காட்சிசாலைகளுக்கு உணவு வழங்கிய விநியோகஸ்தர்களுக்கு தற்போது 59 மில்லியன் ரூபாயை செலுத்த வேண்டியுள்ளதுடன் இந்த வருடத்தின் எஞ்சிய பகுதிக்கு குறைந்தது 120 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7)

## தனியார் வகுப்...

யில் பதற்றமான சூழ்நிலை நிலவியதோடு இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

16 வயதுடைய ராசேந்திரன் யதுசி என்ற மாணவி தாய், தந்தையினை இழந்த நிலையில் மாமனின் அரவணைப்பில் வசித்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் தனியார் கல்வி நிலையம் சென்ற நிலையில் மாலை 5.30வரை வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து குறித்த மாணவியைத் தேடிய உறவினர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியாமையால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டிற்கு அமைவாக நெளுக்குளம் பொலிஸார், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் துணையுடன் குறித்த மாணவியைத் தேடும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது அப்பகுதியில உள்ள மக்கள் நடமாட்டம் அற்ற பகுதி ஒன்றில் உள்ள கிணற்றில் இரவு 7.30 மணியளவில் குறித்த மாணவி சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

தடயவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கிணற்றிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் கீழ்பகுதியில் மாணவியின் காலணி மற்றும் புத்தகங்கள் மீட்கப்பட்டதுடன் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மோப்ப நாய் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தஞ்சம் அடைந்திருந்தது.

குறித்த பாவனையற்ற வர்த்தக நிலையத்தில் மதுபானப் போத்தல்கள் மற்றும் கயிறும் காணப்பட்டன.

மாணவியின் மரண விசாரணைகளின் பின்னரே மரணத்திற்கான காரணம் தொடர்பில் தெரிவிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தமையுடன் மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாருடன் இணைந்து தடயவியல் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## இரு இளம்...

குறித்த இரு குடும்பஸ்தர்களின் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளது.

அதிகளவு போதையே மரணத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் இருந்து வாகனம் ஒன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நான்கு நபர்கள் கொழும்பு நோக்கிப் பயணித்தபோது, மன்னார் உயிலங்குளம் பகுதியில் வைத்து குறித்த பயணம் செய்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களுக்கும் திடீர் சுகயீனம் ஏற்பட்டது.

இதன்போது உடனடியாக குறித்த வாகனம் மீண்டும் மன்னார் வைத்தியசாலைக்கு வந்தபோது குறித்த இரு குடும்பஸ்தர்களும் வாகனத்தினுள்ளேயே உயிரிழந்தனர்.

மேலும் குறித்த வாகனத்தில் வந்த இருவரும் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பேசாலையைச் சேர்ந்த எம்.பிரதீப் (வயது-26) மற்றும் காட்டாஸ் பகுதியை சேர்ந்த எம்.மசூர் (வயது-35) ஆகிய இரு இளம் குடும்பஸ்தர்களே இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

திடீர் சுகவீனமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கும்முன் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

வாகனம்ஒன்றில் 4 பேர் கொழும்பு நோக்கிப் பயணித்த நிலையில் நோய்வாய்ப்பட்டதாக தெரிவித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் உயிரிழந்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

தற்போது உயிரிழந்த குடும்பஸ்தர்களின் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இருவரை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (ம-7,285)

## கட்டா...

ஆவது திருத்தச் சட்டம் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும். அதனைத் தோற்கடிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாகவே, தற்போதைய சூழ்நிலையில் உணவுதான் முக்கியம், அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியமில்லை என்ற பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, 21 ஆவது திருத்தச் சட்டமூலம் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார். (ம-7)

## ஜனாதி...

பிறப்பித்துள்ளது.

கொழும்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நான்கு பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வழக்கின் 11ஆவது மரண தண்டனைக் குற்றவாளியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஆர்.துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் அவரது தாயார் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் கடந்த வருடம் ஜூலை மாதம் 21ஆம் திகதி மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுவை ஆராய்ந்ததன் பின்னரே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளது. (ம-7)

## பெறுமதிசேர்...

இருந்து 12% வரையும் தொலைத் தொடர்புகள் வரி 11.25 வீதத்தில் இருந்து 15% வரையும் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

தனிநபர் வருமான வரியும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

வருமான வரி எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-7)

### கொவிசெத

திகதி 2022.05.31 சீட்டிழுப்பு இலக்கம் 3014

ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 02 23 28 40

### மெகா பவர்

திகதி 31/05/2022 சீட்டிழுப்பு இலக்கம் 1120

C 22 05 08 28 66

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2022.05.31 சீட்டிழுப்பு இலக்கம் 081

கும்பம் 19 33 44 62 கும்பம்

### மஹஜன சம்பத

திகதி 2022/05/31 சீட்டிழுப்பு இலக்கம் 4772

T 1 9 6 4 7 3

### தன நிதானய

திகதி - 2022.05.31 சீட்டிழுப்பு இலக்கம் - 802

B 07 14 19 22

### Super Ball

சீட்டிழுப்பு வாரம் 1747 நிறம் இள நீலம் சீட்டிழுப்பு திகதி 2022.05.31 தினம் செவ்வாய்க்கிழமை

R 24 40 46 76

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,367,200/-

### சனிதா

செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பு திகதி : 2022.05.31 சீட்டிழுப்பு இல : 3908 வர்ணம் : இள நீலம்

ரூ. 2,832,460/-

வெற்றி இலக்கங்கள் 06 28 59 63 P

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 177 சீட்டிழுப்பு திகதி 2022.05.31 செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள் 01 39 49

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,599,680/-

### லக்ன வாசனா

சீட்டிழுப்பு வாரம் 923 2022.05.31 செவ்வாய்க்கிழமை

W 12 23 35 53 61

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 239,332,699/-

### ஜய

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்படும்வரை ரூ. 2,737,830.60

திகதி 2022-05-31 வெற்றி வாரம் 3459 வர்ணம் சிவப்பு

வெற்றி இலக்கங்கள் 22 46 53 56 மிதுனம்

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,090,230.60

### அத கோடிபதி

செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பு இல : 1573 வர்ணம் : இள நீலம் சீட்டிழுப்பு திகதி : 2022.05.31

ரூ. 3,115,940/-

வெற்றி இலக்கங்கள் 33 44 71 73 K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11683)

**076 825 7716 (ஆகாஸ்)**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (11690)

NEW SCIENCE WORLD
VICTORY MUST

## NEW SCIENCE WORLD

கணித, விஞ்ஞான பிரிவுகள்
Tamil and English Medium

**2024 A/L**

ஆரம்பம் : 05.06.2022 ( ஞாயிறு )
நேரம் : 10.15 am

அனுமதிகள் 05.06.2022
காலை 6.00 மணி தொடக்கம் வழங்கப்படும். (C-4398)

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு
**021 221 6690, 077 336 4055, 077 336 4030**
Navalar Road, Brown Road Junction, Jaffna.

NEW SCIENCE HALL

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

**2024 A/L**

கணித, உயிரியல் பிரிவு

நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்
தமிழ் மொழி மூலம், ஆங்கில மொழி மூலம்
எமது ஆசிரியர் குழுவுடன் (C-4405)

ஆரம்பம்
05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்பு
**077 791 7611, 076 569 3006, 076 566 3006**

SPOKEN WITH GRAMMAR
## வகுப்புக்கள்

- 2022 க.பொ.த (சா/த) மாணவர்கள்,
- பல்கலைக்கழக மாணவர்கள்,
- அரசபணி உத்தியோகத்தினர்கள்,
- வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்விரும்புபவர்கள்,
- ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் தனித்தனி வகுப்பு ஒழுங்குகள். (C-4400)

அனுமதிகள்/பதிவுகளுக்கு:
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்.
**0779265447,0217200989**
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (11693)

**076 239 9874**

## IELTS

NEW BATCH ஆரம்பம்
Cont : 077 798 9830
By - B.Murali
Speking & Grammar Class
for Grade 7 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள். (11619)
இல.53, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.


## எரிபொருளை...

யுள்ளார்.

செய்திச் சேவை ஒன்றுக்கு கருத்து தெரிவித்தபோது, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் ரெஹான் வன்னியப்பா இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது விமான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதன் காரணமாக இலங்கைக்கான விமானங்களை இயக்கும் போது போதுமான அளவு விமான எரிபொருளுடன் வருமாறு விமான நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை (11688)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 60 பரப்பு காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார்.கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - நான்கு இலட்சம்

தொடர்பு:- 077 623 4204, 077 288 0152, 076 436 5814 (11677)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுனர் இருபாலாரும் விரும்பத்தக்கது. (11692)

**077 748 8093**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பல் வைத்திய நிலையத்திற்கு வேலையாள் தேவை. (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது) தங்குமிட வசதி உண்டு. (11679)

**077 299 0127**
**076 210 9145**

## PERSONAL CLASS



வல்வெட்டித்துறையில் O/L கல்வி கற்கும் மாணவனுக்கு அனைத்து பாடங்களையும் வீட்டுக்கு வந்து தனிப்பட்ட ரீதியில் சொல்லி கொடுக்கக்கூடிய ஆசிரியர் தேவைப்படுகிறார். (C-4360)

வடமராட்சியில் உள்ள A/L படித்த மாணவர்கள் / பல்கலைக்கழக மாணவர்கள்/ தனியார் ஆசிரியர்கள் விரும்பத்தக்கது.

கல்வி கட்டணம் பேசி தீர்மானிக்கப்படும் 82-015

தொடர்புகளுக்கு- 076 1999450

யாழ்ப்பாணத்தில் படிப்பு
கனடாவில் வேலை

- PROFESSIONAL COOK
- RECEPTIONIST
- ROOM ATTENDANT
- ROOM SERVICE SUPERVISOR



போன்ற HOTEL MANAGEMENT துறைகளில் கல்வி கற்று கனடாவில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுங்கள் (C-4360)

அடிப்படை தகுதி- 40 வயதுக்குட்பட்டவர்கள்.
O/L சித்தியடையாதவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்

- சனி,ஞாயிறு வகுப்புக்கள்
- IELTS CLASSES

CIMS COLLEGE 0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org